

# தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்



தொகுப்பாசிரியர்

**ப.பிரதாப்**



"காலத்திற் கேற்ற வகைகள் அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய் எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்று மில்லை"

சுப்பிரமணிய பாரதியார்

ISBN 8193796381
9788193796382

தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்
(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)

தொகுப்பாசிரியர்
ப. பிரதாப்

உரிமை
ஆசிரியருக்கே

முதற்பதிப்பு
அக்டோபர், 2019

வெளியீடு
தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி

வடிவமைப்பு, அச்சு
பாலகீதா மீடியா, பொள்ளாச்சி, 99761 44451

பக்கங்கள் : 18 + 398 = 416

விலை: ரூ. 450/-

ISBN : ISBN 819379638-1
9788193796382

# 49. தமிழில் அறநெறியும் சமயநெறியும்

ப.பிரதாப்,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, என்.ஜி.எம் கல்லூரி,
பொள்ளாச்சி — 642001.

## முகவுரை

"இலக்கியம் காலத்தை உறிஞ்சி உறிஞ்சித் தன்னுள் பதியம் போடுகிறது" என்பார் கவிஞர். காலம் என்பது எல்லையற்ற தன்மையுள் இருப்பது. அதை நாம் ஓர் எல்லைக்குள் வரையறுத்துக் கொண்டு வாழ்கின்றோம். ஓர் இலக்கியப் படைப்பும் குறிப்பிட்ட காலத்திற்கேற்றாற் போலவும், காலத்தின் சூழலை அறிந்து அத்தேவைக்கேற்றாற் போலவும் தோன்றுகின்றது. இங்ஙனம், அறம் நுவல எழுந்த கீழ்க்கணக்கு நூல்களும் இன்னபிற பிற்கால நீதி நூல்களும் காலத்தின் சூழல் கருதியே எழுந்தவை. சங்கம் மருவிய காலத்தில் அன்னியர் (களப்பிரர் தமிழகத்தைக் கைப்பற்றி கொடுங்கோலாட்சி செய்தனர். அவ்வாறாக தமிழ்ச் சமுதாயம் பல நிலைகளிலும் சீர்கேடடைந்தது. அதன் பொருட்டே அறமும் அதனைத் தொடர்ந்து சமயக் கொள்கைகளும் போதிக்கப்பட்டன. இந்தியாவில் சமய அடிப்படையில் எழுந்த அறத்தினை "வருணாசிரம தருமம்" என்பர். அறமும் சமயமும் மேலோங்கியிருந்த காலச் சூழலை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## அறம் - சொற்பொருள் விளக்கம்

அறத்திற்கு பலரும் பல விளக்கங்களைத் தருகின்றனர். திருக்குறளுக்கு அரிய உரை செய்த பரிமேலழகர் "அறமாவது மனுமுறை முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழித்தலுமாம்" (திருக்குறள் உரைப்பாயிரம்) என்று எழுதுகிறார். இது பொருத்தமானதாகத் தோன்றவில்லை. தமிழரின் வாழ்வியல் நெறிக்கு ஆரியரின் பொருத்தமற்ற நீதிநூல்களைச் சான்றாகக் காட்டி எழுதுவது தவறானது. மனுதர்ம சாத்திரம் தமிழ் நெறிக்கு

மாறானது ஒவ்வொரு குலத்துக்கு ஒரு நீதி வகுப்பது வருணாசிரம தர்மத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. சூத்திரன் ஒரு கொலையைச் செய்தால் அவன் தலையை வெட்டிவிடு, அதே கொலையை ஒரு பிராமணன் செய்தால் அவன் தலையைச் சிறைத்து விடு என்று கூறும் அதர்மப் போக்கு உடையது. இதன் காரணமாகவே பேராசிரியர் சுந்தரம் பிள்ளை,

"வள்ளுவர் செய் திருக்குறளை
மறவற நன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுஆதி
ஒரு குலத்துக்கு ஒரு நீதி"

(மனோன்மணீயம் -தமிழ்த் தெய்வ வாழ்த்து)

என்று பாடியுள்ளார். இங்ஙனம், மனுதர்மத்தை நிலைக் களனாக வைத்துத் தமிழர் கண்ட அறத்திற்கு இலக்கணம் கூறுதல் பொருத்தமானதன்று. எனவே, அறம் என்பது யாது? அது சொல்லா? செயலா? நினைப்பா? என்ற ஐயம் எழலாம். மனித செயலுக்கு அடிப்படையாக இருப்பது அவன் எண்ணமேயாகும். எண்ணம் தூய்மையாக இருந்தால் தான் சொல்லும் செயலும் தூய்மையாக இருக்கமுடியும். எனவே, எண்ணத்திற்கு அடிப்படையாக உள்ள மனம் மாசற்றுத் தூய்மையாக இருக்கும் நிலையே அறத்திற்கு அடிப்படை என்று துணியலாம்.

## அறமாகிய புதிய மரபுக்கான தேவையும் சூழலும்

தமிழ் இலக்கிய சரிதத்தில், சங்க இலக்கிய மரபு அகஇலக்கியம் சார்ந்தும், புறஇலக்கியம் சார்ந்தும், அகமரபாகவும், புறமரபாகவும் இருந்து வந்துள்ளது. இவ்விரு மரபுகளை அடுத்து, அறம் என்ற புதிய மரபு ஒன்று பரிணமித்திருப்பதை பதினெண்கீழ்க்கணக்கு நூல் தொகுப்பு காட்டுகிறது. சங்க நூல்கள் பெரும்பாலும் காதலைப் பற்றியும், அரசியலைப் பற்றியுமே வலியுறுத்திக் கூறுகின்றன. இந்நூல்களில் அறநெறியைப் பற்றிய செய்திகளும் நல்லொழுக்கத்தை வலியுறுத்தும் நீதி மொழிகளும் ஆங்காங்கே கலந்து காணப்படுகின்றன. ஆயினும் நீதி, ஒழுக்கம் பற்றி மட்டும் தனியாகக் குறிப்பிடும் சங்க நூல்கள் இல்லை.

முதன்முதலில், ஒழுக்கத்தைப் பற்றித் தனியாக எழுதப்பட்ட நூல்கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் தொகுதியிலே தான் காணப்படுகின்றன. பதினெண்கீழ்க்கணக்கில் உள்ள பதினெட்டு நூல்களில் நீதி நூல்கள் மட்டும் பதினொன்று. சமண, பௌத்த சமயங்கள் தமிழ்நாட்டில் மிகுதியாகப் பரவிய பிறகு தான், ஒழுக்கம் சார்ந்து தனியாகத் தமிழ்நூல்கள் எழுதப்பட்டன. சமணமும், பௌத்தமும் ஒழுக்கநெறியையே அடிப்படையாகக் கொண்டவைகள். அவை கடவுள் நெறியைப் பற்றியோ, பக்திநெறியைப் பற்றியோ குறிப்பிடவில்லை. ஆதலால், அக்காலத்தில் பல அறநூல்கள் தோன்றின.

## சமணத்தத்துவமும் - அறக்கோட்பாடும்

உறுதிப்பொருள்கள் நான்கனுள் முதன்மையானது அறமாகும். இவ்வறத்தை சமணாசுகள் இல்லறம், துறவறம் என்று இருவகையாகப் பிரித்துள்ளனர். இவ்விரண்டினையும் முறையே சாவகதர்மம் (சிராவக), யதிதர்மம் என்றும் கூறுவர். இல்லறம் எனப்படும் சாவகதர்மம் மனைவி மக்கள் சுற்றத்தாருடன் இருந்து ஒழுகும் ஒழுக்கமாகும். துறவறமாகிய யதிதர்மம் உலகத்தைத் துறந்து வீடு பேற்றினைக் கருதித் தவஞ்செய்யும் முனிவரது ஒழுக்கம். சமணத்தின் தத்துவங்களை விளங்கிக் கொள்வதற்கு யதிதர்மம் எனப்படும் சமணரின் ஒழுக்கத்தை அறிய வேண்டியது அவசியம்.

பிறவியை நீக்கி வீடுபேறு அடைவதற்கு சமணமுனிவர் தமது துறவற வாழ்வில் மேற்கொண்டொழுக வேண்டிய ஒழுக்கங்கள் (விரதங்கள்) ஐந்து. அவை கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, மாணிநோன்பு, அவாவறுத்தல் என்று சொல்லப்படுகிறது. இங்கு அறத்திற்கு அடிப்படையாக சமயம் இருப்பதைக் காணமுடிகிறது.

## சமயக் கருத்துக்கள்

கடவுளை மறந்த சமுதாயம் உலகில் ஏதுமில்லை. கடவுளைப் பற்றி பலவேறு சமுதாயங்களிலும் சமயங்களிலும்

கருத்து வேறுபாடு பல இருக்கலாம். ஆனால், மனிதமனத்தில் கடவுளைப் பற்றி அறியாமல் இருந்தாலும் கூட, இறைவனை நோக்கிய பயணத்தில் வீடுபேறு அடைய வேண்டும் என்பது நம் கலாச்சாரத்திலும் சமுதாயத்திலும் ஊறிப்போயிருப்பதைக் காணமுடியும். ஒரு கிராமத்திற்குச் சென்று அங்குள்ள ஏதோ ஒரு விவசாயிடம் உனக்கு என்ன வேண்டும்? என்று வினவினால் அவரும் கூட, முக்தி வேண்டும் என்று சொல்வதைப் பார்க்க முடியும். இந்த ஒன்று மனத்தில் புரியாவிட்டாலும் அதை நோக்கிச் செல்லும் உந்துதல் உயிர் நிலையில் இருப்பதைப் பார்க்க முடிகிறது. இவ்வாறு மனிதனை சமயத்தின்பால் நெறிப்படுத்த எழுந்தவையே வேதங்கள், உபநிடதங்கள், இராமாயணம், மகாபாரதம், புராணங்கள் போன்றவையாகும். பல்லவர் காலத்தில் தமிழ்நாட்டில் சைவ, வைணவ நெறிகள் பரவி தேவாரம், திருவாசகம் (பன்னிரு திருமுறைகள்), நாலாயிர திவ்யப் பிரபந்தங்கள் போன்றவை தோன்றி மக்களை சமயத்தின்பால் நெறிப்படுத்தின.

### பக்தி இலக்கியம் உருப்பெற்ற சூழல்

சமயச்சிந்தனைகளில், அறவுணர்வும் தத்துவ ஆராய்ச்சியும் முக்கிய இடம் பெற்றதாயினும் வழிபாட்டு முறைகளே பக்தி இலக்கியம் உருப்பெற்று வளர்வதற்குக் காரணம் ஆகும். வழிபாடு பற்றிய அளவில் சங்க காலத்தை விடவும் சிலப்பதிகாரம், மணிமேகலை காலத்தில் ஒரு வளர்ச்சியினைக் கண்டு கூறமுடியும். இவ்வளர்ச்சி பக்திப் பாடல்களின் அடிப்படைச் சூழ்நிலையினை நன்கு காட்டும். வழிபாட்டு நிலையில் வளர்ச்சியடைந்து வந்த வைதிக நெறி — சைவம், வைணவம் என்னும் இரு துறைகளாக வளர்ந்து சிறந்தது. பக்தி இலக்கியமும் இவ்வடிப்படையில் சைவ, வைணவ இலக்கியங்களாகவே தோன்றின.

சங்க இலக்கியம் என்பது ஓராசிரியனின் படைப்போ, ஒரு காலத்துப் படைப்போ அல்ல. அது, ஒரு சில நூற்றாண்டு மக்களின் வாழ்க்கைச் சூழல். அது போல சமய இலக்கியம் என்பதும் ஒரு

காலகட்டத்தின் தேவையாக, சமுதாயத்தின் சூழ்நிலையை மாற்றவல்ல ஒரு பேரிலக்கியமாக விளங்கியது.

### நிறைவாக!

தமிழ் இலக்கியங்கள் காலத்திற்கும் சூழலுக்கும் தக்க வகையில் எவ்வாறு தன்னைக் கட்டமைத்துக் கொண்டது என்பதையும் சமயத்தின் அடிப்படையாக அறம் விளங்கிய பாங்கையும் இக்கட்டுரையின் வாயிலாக விளங்கிக் கொள்ளமுடிகிறது.

### பார்வை நூல்கள்


1. அற இலக்கியக் களஞ்சியம் - க.ப.அறவாணன்
2. தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும் - ஆ.வேலுப்பிள்ளை
3. சமணம் - ஆர்.பார்த்தசாரதி
4. திருக்குறள் - பரிமேலழகர் உரை
5. மனோன்மணீயம் - பெ.சுந்தரம்பிள்ளை
6. பக்தி இலக்கியம் - ப.அருணாசலம்